# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழின் இளமை கருதி அதற்கு வைக்கப்பட்ட பெயர்

அ) செந்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) தேன்தமிழ் ஈ) தீந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. 'பாறை பிளந்து பயன் விளைவிப்பான்....' இதில் பாறை என்று குறிப்பிடப்படுவது

அ) நிலம் ஆ) கடல் இ) குளம் ஈ) மலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. புதியதொரு வீடு என்ற நாடகத்தில் கவிஞர் குறிப்பிடும் தொழில்

அ) உழவுத் தொழில் ஆ) கைத்தொழில்

இ) கடற்றொழில் ஈ) விவசாயத்தொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பின்வருவனவற்றுள் பெயர்ச்சொல்

அ) உறு ஆ) வா இ) தோறும் ஈ) வீடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. போர்வீரர் தங்கியிருந்து போர் புரியும் இடம்

அ) பாசறை ஆ) அரண்மனை இ) கோட்டை ஈ) சத்திரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. 'கோவேத' என்ற முத்திரை கண்டெடுக்கப்பட்டது

அ) வன்னியில் ஆ) பூநகரியில்

இ) கந்தரோடையில் ஈ) ஆனைக்கோட்டையில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. 'பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்....

எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) மூதுரை ஈ) நல்வழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் பகுசொல்

அ) மண் ஆ) கடல் இ) வானம் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. மகாவம்சம் சுட்டெரிக்கப்படவேண்டும் எனக் கூறிய சிங்களத் தத்துவமேதை

அ) லயனல் சரத் ஆ) ஈ.டபிள்யூ.அதிகாரம்

இ) சிறிலால்கொடிகார ஈ) லயனல் ஜெயதிலக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஓடுகின்றனர் என்ற வினைச் சொல்லின் விகுதி

அ) அர் ஆ) னர் இ) ர் ஈ) கின்றனர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. நிலம், நீர், மண், பொன் என்பன

அ) திரிசொல் ஆ) திசைச்சொல் இ) வடசொல் ஈ) இயற்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இராவணனைக் காட்டிக் கொடுத்த இரண்டகன்

அ) தசரதன் ஆ) இராமன் இ) வீடணன் ஈ) கும்பகண்ணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தனிநாயகம் அடிகளார் வெளியிட்ட ஆங்கிலச் சிற்றிதழ்களில் ஒன்று

அ) தமிழ்ப்பண்பாடு ஆ) தமிழ்மறை விருந்து

இ) ஒடிசி ஈ) இலியட்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. வாள் + போர் என்பதைச் சேர்த்தால்

அ) வாள்போர் ஆ) வாள்ப்போர் இ) வாட்போர் ஈ) வாட்ப்போர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. "தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்" இப்பழமொழி குறித்து நிற்பது

அ) தன்னடக்கம் ஆ) பேராசை

இ) விடாப்பிடி ஈ) வீண்பெருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. 'நாராய் நாராய் செங்கால் நாராய்' என்ற பாடலில் சத்தி முற்றப்புலவர் நாரையைத் தூதாக அனுப்பியது

அ) தாய்க்கு ஆ) மனைவிக்கு இ) தங்கைக்கு ஈ) மகளுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பேரும்புகழும் என்பது

அ) இணைமொழி
ஆ) இரட்டைக்கிளவி
இ) அடுக்குத்தொடர்
ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. காராளர் என்ற சொல் குறிப்பது

அ) மன்னரை ஆ) உழவரை இ) மீனவரை ஈ) வணிகரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. போர்த்துக்கேயருக்கு அடிபணியாது இறுதிவரை வீரமுடன் போராடி வீரச்சாவடைந்த மன்னன்

அ) பண்டார வன்னியன்
ஆ) கயிலைவன்னியன்
இ) சங்கிலியன்
ஈ) வீரபாண்டிய கட்டப்பொம்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. உடைமைப் பொருளை உணர்த்தும் வேற்றுமை

அ) இரண்டாம் வேற்றுமை
ஆ) மூன்றாம்வேற்றுமை
இ) நான்காம் வேற்றுமை
ஈ) ஆறாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. "நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா..." என்ற பாடலைப் பாடியவர்.

அ) புகழேந்தி
ஆ) சேக்கிழார்
இ) கம்பர்
ஈ) தேவராசப்பிள்ளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. 'ஔ' என்ற எழுத்தின் இன எழுத்து

அ) இ ஆ) ஓ இ) உ ஈ) ஐ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. இலங்கைத்தீவில் முதன் முதலில் காலடி வைத்த ஐரோப்பியர்

அ) ஆங்கிலேயர்
ஆ) போர்த்துக்கேயர்
இ) ஒல்லாந்தர்
ஈ) செருமனியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. திருக்குறளைக் கடைக்கழகத்தில் அரங்கேற்றச் செய்தவர்

அ) கம்பர் ஆ) ஒட்டக்கூத்தர்

இ) புகழேந்தி ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழ் மண்ணில் காலூன்றப் போர்த்துக்கேயர் எடுத்த முயற்சிகளைச் சங்கிலி மன்னன் முறியடித்த இடம்

அ) மன்னார் ஆ) முல்லைத்தீவு

இ) யாழ்ப்பாணம் ஈ) திருகோணமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. நாற்படை என்பது

அ) தேர், குதிரை, புலி ,யானை ஆ) பல்லக்கு, தேர், குதிரை, காலாள்

இ) யானை, தேர், பல்லக்கு, காலாள் ஈ) தேர், யானை , குதிரை, காலாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. அல்பேர்ட் சுவைட்சருக்கு ________ப் பணிக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அ) அமைதி ஆ) இலக்கிய இ) மருத்துவ ஈ) தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. 'தளிர் போன்ற கை' இவ் உவமை அணியில் வந்துள்ள பொதுத் தன்மை

அ) தளிர் ஆ) கை இ) மென்மை ஈ) போன்ற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. 'த்' என்பது

அ) உயிர் எழுத்து ஆ) மெய் எழுத்து

இ) உயிர்மெய் எழுத்து ஈ) மெல்லெழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. விளையாட்டுத் திடலில் ஊர் கூடியது. இச் சொல்லியத்தில் இடம்பெற்றுள்ளது

அ) தொழிலாகுபெயர் ஆ) பொருளாகுபெயர்

இ) இடவாகுபெயர் ஈ) காலவாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருசியாவுக்கும் துருக்கிக்கும் இடையில் போர் மூண்டது. பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கிக்கு உதவி செய்ய வந்தன. அப்போரிலே பிரித்தானியப் படைவீரர் பலர் காயமடைந்தனர். அப்போது அவர்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் இருக்கவில்லை. விளக்குகளோ மெழுகுவர்த்திகளோ இன்றி நிலவொளியிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது. நாளுக்கு நாள் காயமடைந்தவர்களுடைய தொகை அதிகரித்தது. இச் செய்தியினை இங்கிலாந்தில் இருந்த செல்வி புளோரன்சுநைற்றிங்கேல் அறிந்தார். அவர் தமது கடமையை உணர்ந்தார். அவர் கையில் ஒரு விளக்குடன் சென்று காயப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தார். நோயாளர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறினார். தானே முன்னின்று நோயாளிகளுக்குப் பணிபுரிந்தார்.

கடுமையான உழைப்பின் கரணியமாக நோய்வாய்ப்பட்டார். தாய் நாட்டுக்குத் திரும்பும்படி அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அதற்கு அவர் மறுத்துவிட்டார். தனது நோயையும் பாராமல் தொடர்ந்து பணியில் ஈடுபட்டார். போர் முடிவடைந்தபின்னரே தாய்நாடு திரும்பினார். கையில் விளக்குடன் சென்று பணிபுரிந்ததனால் ‘விளக்கேந்திய பெருமாட்டி’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். தாய்க் குலத்திற்கே பெருமை சேர்த்த இப் பெருமாட்டி 13.08.1910 தனது தொண்ணூறாவது அகவையில் இயற்கை எய்தினார்.

1. விளக்கேந்திய பெருமாட்டி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர் யார்?

______________________________

2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எந்தெந்த நாடுகளுக்கிடையில் போர் மூண்டது?

______________________________

3. ஏன் புளோரன்சு நைற்றிங்கேல் நோய்வாய்ப்பட்டார்?

______________________________

______________________________

4. புளோரன்சு நைற்றிங்கேல் என்பவருக்கு ‘விளக்கேந்திய பெருமாட்டி’ என்ற பெயர் வரக் கரணியம் என்ன?

______________________________

______________________________

5. போரின்போது துருக்கிக்கு உதவி செய்த நாடுகள் எவை?

______________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. திருகோணமலை மாவட்டத்தில் பண்டை நாட்களில் தமிழர் வாழ்ந்ததற்கான சான்று எது?

______________________________

2. தனிநாயகம் அடிகளால் தோற்று விக்கப்பட்டு இன்று வரை நின்று நிலவும் தமிழமைப்பு எது?

______________________________

3. புலவரின் பாடலைச் செவியுற்ற பாண்டிய மன்னன் புலவருக்கு எவற்றைப் பரிசாக அளித்தான்?

______________________________

______________________________

4. தன் இனத்தைப் பகைவனுக்குக் காட்டிக் கொடுப்பவனை எவ்வாறு கூறுவர்?

______________________________

______________________________

5. போர்த்துக்கேயர் எவற்றுக்காகக் கோட்டை அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர்?

______________________________

______________________________

6. வீரமகன் எதை மீட்கும் போரில் வீரச்சாவடைந்தான்?

______________________________

______________________________

7. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்
இக்குறளின் பொருளைத் தருக.

______________________________

______________________________

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## நாம் மறவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| பண்பாட்டை | மறவோம் | மீட்போம் | மண்ணில் | கற்றாலும் |

புலம் பெயர் ____________________ நாம் வாழ்ந்தாலும் - எங்கள்

நிலம் எது என்பதை நாம் ____________________

வாழிட நாட்டை நாம் மதிப்போம் - எம்

வாழ்வியல் ____________________ நாம் மறவோம்

வேற்று மொழியில் ____________________ - உலகம்

போற்றும் எம் மொழியை நாம் மறவோம்

தாய் மண் தன்னை நாம் ____________________

தலைவன் காட்டிய வழியையும் நாம் மறவோம்.

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ. இலக்கண வகையால் தமிழ் மொழியில் உள்ள சொற்கள் எத்தனை?

_______________________________________________

ஆ. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

வினைச்சொல் :- ____________________

உரிச்சொல் :- ____________________

2. தரப்பட்டுள்ள இணைமொழிகளின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

பழக்கவழக்கம் :- ________________________________________

________________________________________

உயர்வுதாழ்வு :- ________________________________________

________________________________________

3. பின்வரும் சொற்களின் புணர்ச்சி வகைகளைத் தருக.

பற்பசை :- ____________________

கொய்யாப்பழம் :- ____________________

காலநிலை :- ____________________

4. 'பாடினான்' என்ற சொல்லைப் பகுத்து எழுதுக.

_______________________________________________

5. தரப்பட்டுள்ள சொற்களின் னகர, ணகர ஒலி வேறுபாடு தோன்றுமாறு கருத்துள்ள சொல்லியங்கள் எழுதுக.

மனம் :- ________________________________________

________________________________________

மணம் :- ________________________________________

________________________________________

புள்ளிகள் 15

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Opfindelsen af computer har gjort det muligt for os at styre verden. Nu er det internettet, der giver verden hurtige forbindelse. Ved hjælp af dette kan vi hører om de seneste nyheder med det samme. Brev sendt til hinanden ved hjælp af internettet kaldes email. En emailen indeholder også adresse. Der bliver ikke store omkostninger for at sende en email.

Computer has brought the world to our fingertips. Today the web connects the world quickly. Therefore we can see all the news happening around the world in the web. We can send mail to one and other . It is called electronic mail. It has an address too. sending electronic mail does not cost.

Aujourd'hui, nous avons le monde entre nos mains grâce à l'arrivée de la nouvelle technologie. Internet est la source qui nous lie pour avoir un accès rapide. Grâce à ces moyens, nous avons la possibilité de savoir à la minute tout ce qui se passe dans le monde entier. On appelle courrier électronique (e-mail) lorsqu'une personne envoie un courriel à une autre personne, il y a une adresse mail pour cela. Iln'y a aucune dépense pour envoyer un courrier électronique.

Die Erscheinung des PCs/Computers hat die Welt in unseren Händen gebracht. Das Internet verbindet die Welt heute sehr schnell. Dadurch erfahren wir Ereignisse sofort. Der Brief, der von einer Person an die andere Person, durch das Internet versendet wird, wird E-Mail genannt. Hierfür gibt es auch eine Adresse. Der Versand der E-Mails verursacht nicht viel Kosten.

De komst van de computer heeft de wereld in onze handen gebracht. Het internet verbindt de wereld snel. Hierdoor kunnen we alle nieuws snel verkrijgen. E-mail betekent dat je elkaar door middel van internet een bericht kunt verzenden. Hiervoor heb je een e-mail adres en heeft geen kosten verbonden om de mail te versturen.

Il computer ci ha permesso di controllare il mondo. Internet collega rapidamente diverse parti del mondo. In questo modo possiamo conoscere le notizie in tempo reale. I messaggi che vengono inviati con internet da una persona all'altra prendono il nome di posta elettronica. Anche la posta elettronica ha un indirizzo. Mandare la posta elettronica non ha grandi costi.

Etter at datamaskin inntok plassen, er verden blitt pakket sammen i våre hender i dag. Internett binder verden veldig raskt i dag. Dette gjør det mulig å få nyheter med engang. Med internett kan vi sende post til hverandre, dette kalles for e-post. E-post har også en adresse. Sending av e-post koster ikke så mye.

Datorns ankomst har idag satt världen i våra händer. Det som snabbt kopplar upp världen idag är internet. Genom det kan man ta del av pågående nyheter på en gång. Den post som man skickar till varandra via internet kallas för e-post. För det här finns adress. För att skicka e-post kostar det inte särskilt mycket.

புள்ளிகள் 05

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தனிநாயகம் அடிகளார்
- இலங்கையின் முதற் குடிகள்
- நீர் தமிழ் கற்பதன் நோக்கம்

புள்ளிகள் 20